**தலைப்பு – 139 மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்கும் உரித்தான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

## 1. அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 290 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்குறித்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பின்வரும் திகதிகளில் அவ் அமைச்சின் செயலாளருக்கும் திணைக்களத் தலைவருக்கும் வழங்கப்பட்டிருந்தன. கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 139 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 2015 திசெம்பர் 21 |
| 290 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 2015 ஒக்டோபர் 15 |

**1.2 கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 9,416 மில்லியன் தொகையானதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 8,069 மில்லியன் பயன்படுத்தப்பட்டு அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாட்டில் சேமிப்புகள் ரூபா 1,347 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 14 சதவீதமாகியிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| **தலைப்பு** | **தேறிய ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | **சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 139 | 3,186 | 2,483 | 703 | 22 |
| 290 | 6,230 | 5,586 | 644 | 10 |
| | **9,416** | **8,069** | **1,347** | **14** |

**(ஆ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக வேறு அமைச்சுக்களினாலும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தாலும் வழங்கப்பட்ட ரூபா 127.12 மில்லியன் ஏற்பாட்டில் ரூபா 81.37 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஏற்பாடுகள் பெறப்பட்ட அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாடுகள் வழங்கிய அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாடுகள் | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 126.50 | 80.86 | 45.64 |
| | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 0.04 | 0.04 | - |
| | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 0.11 | 0.05 | 0.06 |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 0.47 | 0.42 | 0.05 |
| | | **127.12** | **81.37** | **45.75** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீடு 1 இற்காக ரூபா 7.37 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 15.08 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 205 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்திற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவு<br>ஆகக் கூடிய எல்லை | <br>உள்ளபடியானது | பெறுவனவுகள்<br>ஆகக் குறைந்த எல்லை | <br>உள்ளபடியானது | வரவு மீதி<br>ஆகக் கூடிய எல்லை | <br>உள்ளபடியானது |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 13901 | 6.00 | 5.98 | 3.80 | 5.03 | 31.00 | 24.43 |
| 29001 | 25.00 | 21.94 | 13.05 | 20.16 | 110.00 | 74.24 |

**2.4 கட்டு நிதிக் கணக்குகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 403 மில்லியன் தொகையாகும். விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 7002/0000/00/0089/0014/000 | 386.03 |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 7002/0000/00/0257/0014/000 | 17.60 |
| கூட்டுத்தொகை | | 403.63 |

**2.5 பொதுவைப்புக் கணக்குகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 530.74 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| மீன்பிடி மற்றும் நீரியல் | 6000/0000/000/0015/0051/0001 | 51.20 |

| | | |
|---|---|---|
| வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | | |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 6000/0000/000/0015/0145/000 | 479.54 |
| | | --------------- |
| கூட்டுத்தொகை | | 530.74 |
| | | ======== |

**2.6 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி, அமைச்சினதும் திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் போதியளவானதும் முக்கியமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியிலும் 4 ஆம் பந்தியிலும் காண்பிக்கப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 139 – மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**

**3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிப் பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 9,664,584 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமற்போயிருந்தன.

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்த 19 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 பாதீடு**

முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 43.09 மில்லியனால் மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடற்றொழில் பிரிவின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து ரூபா 92 மில்லியன் தொகையான ஏற்பாடு பெறப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இதில் ரூபா 46.3 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதன் படி ரூபா 45.7 மில்லியன் தொகை எஞ்சியிருந்தது. அச் சேமிப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு மீள அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் ''திவிநெகும'' செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதன் முன்னேற்றம் 56.5 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய நீரியல் வள வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் 2013 ஆம் ஆண்டின் போது கையில் உள்ள பட்டியல்களைத் தீர்ப்பதற்கு ரூபா 34,500,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. தேசிய நீரியல் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவராண்மையால் (NARA) 2013 ஆம் ஆண்டின் போது 06 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ப்பு மீன்களுக்கான உணவுத் தயாரிப்புச் செயற்திட்டத்திற்கு இச் செயற்திட்டத்தில் இருந்து ரூபா 536,679 செலவிடப்பட்டிருந்தது. இதற்காக குறித்த மாவட்ட செயலாளர்களுடாக தேவையான ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக இச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.5 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் குறித்த செயற்பாடுகளுக்காக வழங்கப்படும் குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி அச் செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 14 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 44,772,984 கூட்டுத்தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்படாது செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து பெறப்பட்ட குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 20 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 611,455 கூட்டுத்தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதியும் எரிபொருள் முற்பணமும் செயற்பாடு முடிவுற்று 02 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான வீச்சிலான காலதாமதத்தை அடுத்து தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ஒரு தடவை வழங்கப்படக்கூடிய ஆகக் கூடுதலான துணைக்கட்டுநிதி ரூபா 20,000 ஆன போதிலும், இதற்கு முரணாக 25 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 இற்கு மேலாக ரூபா 920,140 கூட்டுத்தொகையான துணைக்கட்டுநிதியும் எரிபொருள் முற்பணமும் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்குத் தேவையான மீன்களைக் கொள்வனவு செய்யும் நாளாந்தச் செலவினத்திற்காகவும் மீளப்

பெறப்படும் அடிப்படையில் 2010 நவம்பர் 5 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையான முற்பணத்தில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டிருந்தது. முற்பணம் வழங்கப்பட்டு 4 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும், ரூபா 8 மில்லியன் தொகையான எஞ்சிய மீதி இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கு 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் அமைச்சு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகச் செயற்திட்டத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்கு தற்காலிகமாக முற்பணமாக 2 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 33,000,000 தொகையான முற்பணத்தில் ரூபா 22,366,752 தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்க்கப்பட்டிராத மீதி ரூபா 10,633,248 ஆகக் காணப்பட்டது. இங்கு கடன் தொகையைத் தீர்ப்பதற்குப் பதிலாக சீனோர் மன்றம் அங்கீகாரம் இன்றி ரூபா 3,358,648 தொகையை மன்றத்திற்கு அறவிடப்பட வேண்டிய பட்டியல்களின் மூலம் ஈடுசெய்திருந்தது.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

13901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்கான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினதித்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட 1 வருடத்திலிருந்து 29 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவிவரும் ரூபா 1,479,110 தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, ஓர் உத்தியோகத்தர் மாற்றலாகி வந்து 02 மாதங்கள் கடந்த பின்னர் அல்லது ஓர் உத்தியோகத்தர் மாற்றம் பெற்று 03 மாதங்கள் கடந்ததை அடுத்து திணைக்களத்திற்கு இடையே தீர்க்கப்படாத கடன் மீதிகள் காண்பிக்கப்படலாகாத போதிலும் 1985 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை 29 ஆண்டுகளைப் பார்க்கிலும் அதிக காலமாக நிலவிவரும் இடமாற்றலாகிச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 153,526 தொகையான கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களில், பல்வேறு காரணங்களிற்காக தீர்க்கப்படாது காணப்பட்ட ரூபா 45,910 தொகையான கடன் மீதியை பிணையாளிகளிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முற்பணங்கள் தீர்ப்பனவுக் குழுவால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் செயற்திட்டங்களிற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 261,810 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது. தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவின் படி இக் கடன் மீதிகள் தீர்க்கப்படாது அப் பதவிகளிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(உ) 1985 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஓய்வுபெற்றுச் சென்ற 35 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 127,580 தொகையான கடன் மீதிகளை அவர்களின் ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகையில் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1986 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது இறந்த 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 62,569 தொகையான கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(எ) 1994 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட சாரதியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப்பணம் 2013 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் அறவிடப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படுவதற்கிருந்த நிலுவை மீதி ரூபா 14,000 ஆகக் காணப்பட்டது.

(ஏ) 1985 ஆம் ஆண்டு முதல் 2009 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது கடமையை விட்டுச் சென்ற 24 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 664,471 தொகையான கடன் மீதிகள் 27 ஆண்டு காலமாக அறவிடப்படாது முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(ஐ) 1994 ஆம் 1995 ஆம் ஆண்டுகளின் போது முன்னாள் அமைச்சரின் உத்தியோகபூர்வ சேவைக்காலம் முடிவுற்றதை உடனடுத்து அமைச்சரவை தீர்மானத்தில் கடமையை முடிவுறுத்தப்பட்ட தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 04 பேரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 78,754 தொகையான கடன் மீதிகளை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறாகும்.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்

2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சு 2015

ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் அவ் அறிக்கையைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சிடம் இருந்த ஓர் வாகனம் முறையற்ற விதத்தில் கடற்றொழில் நீர் வளங்கள் திணைக்களத்திற்கு 2014 ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் இணைக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய நிறுவகத்திடம் இருந்த சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்

ஏனைய நிறுவகத்திடம் இருந்த 03 வாகனங்கள் முறையான அங்கீகாரம் இன்றி அமைச்சால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

அமைச்சால் 2014 திசெம்பர் 31 வரையில் 3 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலவிவரும் தீர்க்கப்படாத ரூபா 600,193,305 தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பினை விஞ்சி ரூபா 229,983,736 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ii) கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடற்தளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களுக்காக திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினத் தொகையான ரூபா 453,000,000 ஆனதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம் ரூபா 575,427,739 ஆக அதாவது 127 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் படி, மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 122,427,739 இற்காக கடப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**3.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுத் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| | VII ஆம் அத்தியாயத்தின் 12.7 ஆம் பிரிவு | 1,410,273 | வெற்றிடம் நிலவிய பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் சமுத்திர) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு 2012 ஒக்டோபர் மாதம் முதல் 2014 திசெம்பர் மாதம் வரை பிரமாணங்களுக்கு முரணாக எரிபொருள் கொடுப்பனவும் போக்குவரத்துப் படிப்பணமுமாக ரூபா 1,410,273 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| | நிதிப் பிரமாணம் 207(2) மற்றும் (3) | 155,000 | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிராத சிங்களப் புதுவருட விழாவை நடாத்துவதற்கு மைதானத்தை ஒதுக்கும் கட்டணம், பதவியணிப் பயிற்சிச் செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |
| **(இ)** | **சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை** | | |
| | 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | - | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக அமைச்சு அலுவலகத் திற்கு 08 வாகனங்களும் பிரதி அமைச்சு அலுவலகத்திற்கு 04 வாகனங்களும் வழங்கப் பட்டிருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஈ)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| | (i) | 2008 யூன் 06 ஆம திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1,890,124 | சுற்றறிக்கையின் பிரகாரம், போக்குவரத்துப் படிப்பணம் உரித்தற்ற 04 உத்தியோகத்தர் களுக்கு மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் மாதாந்தம் ரூபா 30,000 படி போக்குவரத்துப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தன. |
| | (ii) | 2000 யூலை 19 ஆம் திகதிய 12/02 ஆம் இலக்க சுற்றறிகக்கையின் 02 ஆம் 07 ஆம் பந்தி | - | பயிலுனர்களாக செயன்முறைப் பயிற்சி அரசாங்கப் பயிற்சி நிறுவகங்களில் பாடநெறிகளைப் பயின்று தகைமை பெற்ற மாணவர்களுக்காக மாத்திரமே யான போதிலும் இதற்கு மாறாக மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் இணைந்த இரு கணக்காளர்களுக்கு கணக்காளர் பதவியில் பயிற்சியளிப்பதற்காக மீன்பிடி அமைச்சிற்கு விடுவிக்கப் பட்டிருந்தனர். கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தல், கொடுப்பனவு செய்தலுக்கான அதிகாரம் மற்றும் அமைச்சின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு உரிய காசோலைகளில் கையொப்பம் இடும் அதிகாரமும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. |
| (உ) | திறைசேரிச் சுற்றறிக்கை | | | |
| | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 1,638,357 | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| | 2010 மே 20 ஆம் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை 4(I) மற்றும் 4(II) ஆம் பந்திகள் | | 93,901 | அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்கு உரித்தற்ற 03 உத்தியோகத்தர்களுக்காக அந் நிதியத்திற்கு தவறாக செலவு |

வைக்கப்பட்ட பங்களிப்புத் தொகை அவ் உத்தியோகத்தர் களுக்கு மீளச் செலுத்தப்படுகையில் அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாக அரசாங்கப் பங்களிப்பும் அவர்களுக்குச் செலுத்தப் பட்டிருந்தது.

**3.9 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

**3.9.1 சுனாமிக்குப் பின்னரான புனரமைப்பு மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

விவசாய அபிவிருத்திக்காக சர்வதேச நிதியத்தின் மூலம் நிதியீட்டப்பட்ட மற்றும் அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட சுனாமிக்குப் பின்னரான புனரமைப்பு மற்றும் வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயற்திட்ட காலப்பகுதி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்றிருந்தது. செயற்திட்டத்தின் கணக்கு நடவடிக்கைகள் முடிவுறுத்துவதற்காக 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்திற்கு உரித்தான 02 வங்கிக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் மாதம் முதல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் வங்கிக் கணக்குகளில் நிலவிய ரூபா 4,499,790 தொகையான மீதி திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு கணக்குகள் மூடுவதற்கு 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டம் பூர்த்தியானதை அடுத்து முடிவுறுத்தல் கணக்குகள், செயற்திட்ட நோக்கை எய்துவது தொடர்பான செயலாற்றல் அறிக்கையும் சொத்துக்கள் ஒப்படைப்பது தொடர்பான அறிக்கையும் 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9.2 பூர்த்தி செய்யப்பட்ட வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் நோக்கங்களை அடைந்து கொண்டு அவற்றின் சொத்துக்களை ஒப்படைப்பது குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கப்படாமை**

வேலை முடிவடைந்த பின்வரும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொண்டு செயற்திட்டத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை ஒப்படைக்கும் அறிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம்<br>------------- | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி<br>------- |
|---|---|
| சுனாமியால் விபத்திற்குட்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியமைக்கும் செயற்திட்டம் | 2010.12.31 |
| கரையோர வள முகாமைத்துவச் செயற்திட்டம் | 2009.06.30 |
| சுனாமியின் பின்னர் சீவனோபாய உதவி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 2011.09.30 |
| இலங்கைப் பெருங்கடலின் வெளி எல்லையைத் தீர்மானிக்கும் செயற்திட்டம் | 2012.12.31 |

## 3.10 உள்நாட்டு நிதியீட்டத்தின் ஊடாக செயற்திட்டம் செயற்படுத்தல்

### 3.10.1 மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடற்பகுதியின் அபிவிருத்திச் செயற்திட்டம்

இச் செயற்திட்டத்திற்கு 2013 யூன் 17 ஆம் திகதி தேசிய கொள்வனவுத் திணைக்களத்தினதும் 2013 ஆகஸ்ட் 02 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதன் கிரயம் ரூபா 2,000 மில்லியன் தொகையாகியிருந்தது. 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மீன்பிடித் துறைமுகம் ஒன்று, நங்கூரம் இடப்படுவதற்கான 02 இடங்கள், தற்போதுள்ள 02 துறைமுகங்களிலும் இறங்குதுறையிலும் ஜெட்டி மற்றும் அலைதாங்கிகளின் நிர்மாணிப்புகள் போன்ற செயற்பாடுகள் அச் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இங்கு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மீன் பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சினதும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினதும் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் படி ஒப்பந்தம் வழங்கப்பட்டு உள்நாட்டு நிர்மாணிப்பு நிறுவகத்தினூடாக மேற்கொள்ளப் படுவதற்கும் இதற்காக செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கும் இயக்குவதற்கும் ஓர் பிரிவை ஸ்தாபிப்பதற்கும் 2013 செப்தெம்பர் 05 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகரித்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்திட்டத்திற்கு ரூபா 3,505 மில்லியன் கூட்டுத்தொகைக் கிரயமான 08 துணைச் செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டு ரூபா 5,505 மில்லியன் வரை செயற்திட்ட மதிப்பீடு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டக் காலம் 2016 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் திருத்தங்களிற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபா 5,505 மில்லியனாக திருத்தப்பட்டு மேலும் ரூபா 400 மில்லியன் தொகையான செயற்திட்டச் செயற்பாடுகள் இரண்டு உள்ளடக்கப்பட்டு செயற்திட்டக் காலம் 2017 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2015 சனவரி 06 ஆம் திகதி தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் இதற்காகப் பெறப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்குறித்த செயற்திட்டச் செயற்பாடுகளுக்கு முன்மொழிவுத் திட்டங்கள்

தயாரிக்கப்படுகையில் நிதிப் பிரமாணம் 3(ஆ) இன் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரமும் 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் படி ஒவ்வொரு துணைச் செயற்திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தின் பெறுமதிப் படி அமைச்சரவை கொள்வனவுக் குழுவின் மூலம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இதற்கு மாறாக அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்குத் தொடர்புபடுத்தப்படக் கூடியவாறு துணைச் செயற்திட்டங்களின் கிரயங்கள் (பக்கேஜ்) தொகுதிகளாக்கப்பட்டு அமைச்சின் கொள்வனவுக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.9.1 ஆம் வழிகாட்டலின் படி கொள்வனவுக் குழுவிற்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படுகையில் ஒரு செயற்திட்டம் தனியான கொள்வனவாகக் கருதப்பட்டு கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதற்குப் பதிலாக ஒவ்வொரு பகுதிகளுக்குமாக வெவ்வேறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இச் செயற்திட்டங்கள் கூறாக்கப்பட்டு கொள்வனவு நடைமுறை மேற்கொள்ளப்படுகையில் அமைச்சரவைக் கொள்வனவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதைத் தவிர்த்துக்கொள்வதற்காக அமைச்சால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதால் ஒவ்வொரு கூறிற்காகவும் வெவ்வேறாக ரூபா 1,007,500 தொகையான கொள்வனவுக் குழுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாகி இருந்தது. அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டல் கோவையின் 2.9.1 ஆம் வழிகாட்டலின் படி குழுக் கொடுப்பனவிற்காக தகைமை பெற்றுக்கொள்வதற்கு அதன் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் சாதாரண கடமை நேரத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கடமை நேரத்திற்கு மாறாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

(ஊ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டலின் படி கொள்வனவுச் செயற்பாடுகளை ஆகக் குறைந்த கிரயத்தில் மேற்கொள்ள வேண்டிய போதிலும் செயற்திட்டத்திற்காக பட்டியல் பெறுமதி ரூபா 4,401,403 ஆன 02 Weigh Bridge இயந்திரங்களை அரசாங்கக் கம்பனி ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 5,501,754 தொகை அக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, முறையான அதிகாரப்பொறுப்பு இன்றி ரூபா 1,100,351 அக் கம்பனிக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) பாணந்துறை மீன்பிடித் துறைமுகத்தின் முகத்துவாரத்தின் அருகாமையிலும் துறைமுக நிரம்பும் மண்ணை அகற்றுவதற்கு மீன்பிடி, நீரியல் வள அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் அறிவித்தலின் படி செயற்திட்ட நிதியத்தில் ரூபா 20,000,000 தொகை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக 2014 யூலை 30 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்டத்திற்கு 18 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தால்

29 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அங்கீகாரம் இன்றி ஆட்சேர்க்கப்பட்டிருந்த 11 உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக 2014 ஆகஸ்ட் மாதம் வரையில் ரூபா 2,485,675 செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, இவ் ஆட்சேர்ப்பு மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் முறையான அதிகாரப் பொறுப்பு இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஐ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் செயற்திட்டத்திற்கு 4 சாரதிகளை சேர்ப்பதற்கான அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதன் படி, 4 முழு நேர சாரதிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதை அடுத்து மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் மூன்று சாரதிகளுக்கு நிரந்தர சம்பளத்தில் 1/3 படி ரூபா 120,109 கூட்டுத்தொகையான படிப்பணம் 2014 ஆகஸ்ட் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) அடிக்கல் நாட்டுவது செயற்திட்டங்களின் வழமையான செயற்பாடான போதிலும் களமெட்டிய மீன்பிடித் துறைமுகம், கைகாவல மற்றும் பெருலிய நங்கூரமிடற் பகுதி போன்ற செயற்திட்டங்களில் அவ் விழாக்களிற்கான 08 நடனக் குழுக்களுக்கு ரூபா 512,650 தொகையும், அரங்கிற்காக ரூபா 523,500 தொகையும், விளம்பரப் பதாகை மற்றும் சுவரொட்டி அச்சிடலுக்காக ரூபா 565,500 தொகையும் பலூன்களுக்காக ரூபா 157,000 தொகையுமாக ரூபா 1,758,650 கூட்டுத்தொகையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஓ) களமெட்டிய மீன்பிடித் துறைமுகம் மற்றும் கைகாவல நங்கூரமிடற் பகுதி நிர்மாணிப்பதற்கு அடிக்கல்நாட்டும் விழாவிற்காக வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,200,000 தொகையான மதிப்பீடு செயற்திட்டக் கொள்வனவுக் குழு அங்கீகரித்திருந்ததுடன் இதற்கான செலவினத்திற்காக அக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 1,659,740 ஆகும். இதன் படி, கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டலின் படி, குறித்த அதிகாரத்தின் முன்னங்கீகாரம் இன்றி மதிப்பீட்டுத் தொகையை விஞ்சி ரூபா 459,740 செலவிடப்பட்டிருந்தது.

(ஔ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.1 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த செயலாற்றலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து சம்பள ஏற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய செயலாற்றல் மதிப்பிடப்படாது 2014 நவம்பர் 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஐந்து உத்தியோகத்தர்களிற்கு ரூபா 16,605 கூட்டுத்தொகையான சம்பள ஏற்றங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(க) 2007 திசெம்பர் 20 ஆம் திகதிய 33(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டங்களின் துணைப் பதவியணியினரிற்கு அரசாங்க சேவையின் இணையான பதவிகளின் அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக 50 சதவீதமான படிப்பணம் வழங்கப்படக் கூடிய போதிலும் செயற்திட்டத்தின் துணைப் பதவியணிக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 50 சதவீதமான படிப்பணம் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

(கா) பகுதி நேர அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பணிப்பாளரின் வாழ்க்கைச் செலவினப் படிப்பணம் நிரந்தர சேவை ஸ்தலமான அரச

கம்பனியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2014 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை ரூபா 93,600 கூட்டுத்தொகையான வாழ்க்கைச் செலவினப் படிப்பணம் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(கி) தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிக நேர மணித்தியாலத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய விகிதம் மாதாந்த சம்பளத்தில் 1/240 ஆக வேண்டிய போதிலும் இதற்கு மேலான மேலதிக நேர விகிதத்தில் 06 ஊழியர்களுக்கு மேலதிக நேரப் படிகள் செலுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 40,233 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(கீ) தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஓர் உத்தியோகத்தருக்கு கடமைக்காக பயணத்தின் தூரம் 7 மைல்களிற்கு மேற்படுகையில் 12 மணித்தியாலங்களிற்கு மேலான காலம் கடமை நிலையத்திற்கு வெளியே களிப்பதற்கு நேருமாயின் செலுத்தப்படக்கூடிய இணைந்த படிப்பணம் ரூபா 500 ஆக வேண்டும். 04 உத்தியோகத்தர்களுக்கு 06 சந்தர்ப்பங்களில் உணவு மற்றும் தங்குமிடத்திற்காக நாளொன்றிற்கு ரூபா 500 இற்கு மேலாக செலவிடப்பட்டு ரூபா 104,523 தொகை செயற்திட்டத்தால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(கு) கொழும்பு முதல் காரைநகர் வரை தரை மற்றும் புகையிரத வழியாகச் செல்வதற்கான வசதிகள் இருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்திட்டத்தின் இரு உத்தியோகத்தர்கள் 2014 யூலை 23 ஆம் திகதி இரத்மலானையிலிருந்து பலாலி வரை விமானத்தின் மூலம் பயணிப்பதற்காக தனியார் விமான சேவை நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 35,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(கூ) செயற்திட்டத்தின் தேவைப்பாட்டில் சில்லறைக் காசுக் கட்டுநிதியாக ரூபா 20,000 தொகையும் எரிபொருள் கட்டுநிதிக்காக ரூபா 100,000 தொகையும் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் இதற்காக அரச கணக்குகள் திணைக்களத்தில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(கெ) சிலாவத்துரை, குருநகர் மற்றும் கன்தர மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு உரித்தான அடிப்படை கற்கைச் செயற்திட்டங்களிற்காக அப் பிரதேசங்களின் காணிகள் கைப்பற்றப்படுவதற்காக ஆராய்ச்சி, அடிப்படைத் திட்டமிடல் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதற்கு ரூபா 90 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இத் துறைமுகங்களின் அடிப்படைத் திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்படுவதற்கு உரிய ஒப்பந்தக் கம்பனி சமர்ப்பித்திருந்த ரூபா 159 மில்லியன் தொகையான கட்டணம் செயற்திட்டக் கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டுக் கிரயம் 77 சதவீதத்தால் மிகைத்திருந்த போதிலும், இது தொடர்பான காரணங்கள் தெரிவிக்கப்படாது கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) ஆரம்பக் கற்கைக்காக ஒப்பந்தம் ஒப்படைக்கப்படுகையில் முன்னர் உடன்பட்ட நிலையான கட்டணத்திற்கு பணி ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது ஒப்பந்தக்காரரால் 3 துறைமுகங்களிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 18,221 மில்லியன் கிரயமான மதிப்பீடுகளின் விகிதாசாரப் பெறுமதியாக ரூபா 159 மில்லியன் தொகையான கட்டணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் 3.3 ஆம் வழிகாட்டலின் படி பிரசித்த மனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மனுதாரர்களின் முன் தகமைகள் பரீட்சிக்கப்படாது முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட 04 வழங்குனர்களுக்கு மனு அழைப்பு தொலை நகல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர்களுடன் முறையான ஓர் உடன்படிக்கையின் பேரில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.1.4 ஆம் வழிகாட்டலின் படி பராமரிக்கப்பட வேண்டிய அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) செயற்திட்டத்தின் கொள்வனவுக் குழுவால், எதிர்பாராத மற்றும் விலைகள் மாற்றமடைவது தொடர்பாக ஏற்படக்கூடிய கிரயமும் உள்ளடங்கிய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்ட மதியுரைக் கட்டணங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற கிரயங்களிற்காக ரூபா 14.44 மில்லியன் மதியுரைக் கட்டணத்தைச் செலுத்த நேர்ந்திருந்தது.

(கே) கப்பரதொட நங்கூரம்பொலவிற்கு அண்மையில் உள்ள இறங்குதுறை நிர்மாணிப்பு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டு விபரமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கப்பரதொட்ட நங்கூரமிடற் பகுதிக்கு அண்மையில் உள்ள இறங்குதுறையை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டப் பணிப்பாளரால் ஒரு சதுர மீட்டருக்கு ரூபா 350,000 படி மொத்த செயற்பாட்டிற்கும் ரூபா 455 மில்லியன் தொகையான மொத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தின் அத்திவாரமிடல் வைபவத்தை நடாத்துவதற்கு முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் நிர்மாணிப்பு ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட முன்னர் அதாவது 2014 மார்ச் 15 ஆம் திகதி அத்திவாரமிடல் வைபவத்தை நடாத்துவதற்கு ரூபா 2,665,975 செலவிடப்பட்டிருந்தது.

(iii) அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக ஓர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராததுடன் விலைக்கோரலும் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமும் இன்றி சகல செயற்பாடுகளும் ஓர் தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டிற்காக அத் தனியார் நிறுவகத்திற்கு ரூபா 1,599,585 தொகையான

முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அத் தனியார் நிறுவகத்தால் பட்டியலுக்குப் பதிலாக ஓர் விலைப்பட்டியலின்றி மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.

(iv) ஜெட்டி நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் அடிக்கல் நாட்டுதல் செயற்பாடு செயற்திட்டத்தின் வழமையான தொழிற்பாடான போதிலும், செலவின மதிப்பீட்டின் படி ரூபா 2.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டு ஆடம்பரமான ஓர் வைபவமாக நடாத்தப்பட்டதன் காரணமாக அரசாங்க நிதி பயன்படுத்தப்படுகையில் சிக்கனமாகவும் விரயத்தைக் குறைக்கும் வகையில் இங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2014 ஒக்டோபர் 23 ஆம் திகதி ஒப்பந்த நிறுவகம் ஒன்றுடன் ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 15 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) களமெட்டிய மீன்பிடித் துறைமுக் நிர்மாணிப்பு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இத் துறைமுக நிர்மாணிப்பிற்காக பிரசித்த விலைமனுக் கோரல் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் செயற்திட்டத் தொகுதி (பகேஜ்) 06 ஆகப் பெயரிடப்பட்டு வெவ்வேறாக விலை மனு கோரப்பட்டிருந்தது. இங்கு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து விலைமனுதாரர்களில் ஒரு கம்பனி தவிர்ந்த ஏனைய கம்பனிகள் 06 பகேஜ்களுக்கும் வெவ்வேறு பகேஜ் படியான ஒப்பந்தமாகக் கருதி விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர். ஆகையால் ஒவ்வொரு விலைமனுக்களும் உரிய விலைமனுதாரர்கள் மூலக் கிரயம் (Preliminary Cost) சேர்த்திருந்தமையால் மொத்த ஒப்பந்தக் கிரயம் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. பகேஜ் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படாத விலைமனுதாரர்களின் மொத்தக் கிரய மதிப்பீடு ஏனைய விலைமனுதாரர்களைப் பார்க்கிலும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. சகல விலைமனுதாரர்களிற்கும் கூட்டாக விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது (Pre Bid Meeting) அறிவுறுத்தப்பட்டிராமையால் இது இக் கொள்வனவின் வெளிப்படையான தன்மையில் தாக்கத்தைச் செலுத்தியிருந்தது.

(ii) செயற்திட்டத்தின் 06 பிரிவுகளும் 06 ஒப்பந்தங்களாகக் கருதப்பட்டு வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படாது கம்பனி ஒப்பந்தக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் அக் கம்பனியும் சில மூலச் செலவினங்களை 06 பகேஜ்களிற்காக மீண்டும் மீண்டும் உள்ளடக்கியிருந்தமையால் செயற்திட்டக் கிரயம் அதிகரித்திருந்தது.

(iii) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.14 ஆம் 5.3.15 வழிகாட்டலின் படி விலைமனுக் கோரல் நிபந்தனைகளில் மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகள் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் சகல தரப்பினரும் தெளிவூட்டப்பட்டிராமையால் களமெட்டிய மீன்பிடித் துறைமுக

நிர்மாணிப்பு ஒப்பந்தத்திற்கு ஆகக் குறைந்த விலை தேர்ந்தெடுக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 33,810,036 தொகையான நிதிசார் நட்டம் அரசாங்கத்திற்கு நேர்ந்திருந்தது. மேலும் இங்கு அளவீட்டுப் பத்திர விடயம் ஒன்று அகற்றப்பட்டமை சகல விலைமனுதாரர்களையும் தெளிவூட்டப்படாததன் காரணமாக ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த விலைமனுதாரரின் விலைமனு மதிப்பிடப்படுகையில் அவ் விடயங்கள் அகற்றப்பட்டு மதிப்பீட்டால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 12,500,000 நிதிசார் சேமிப்பு அரசாங்கத்திற்கு கிடைக்கத் தவறியிருந்தது.

(iv) செயற்திட்டத்தின் ஆலோசனைக் கம்பனி தயாரித்த பொறியியல் மதிப்பீட்டில் ஒரே மாதிரியான விடயங்கள் ஒரே தொகுதிக்கு உரித்தான விகிதாசாரத்தில் வழமைக்கு மாறான முரண்கள் நிலவியமை, சில விடயங்களிற்காக ஒப்பந்தக்காரர்களின் விலைகளிற்கும் மதிப்பீட்டு விலைகளிற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் நிலவியமை போன்ற காரணங்களால் மதிப்பீடு நடைமுறை நிலையிலிருந்து விலகியிருந்தது. நீர்த்தடை ஆழத்தின் படி மாற்றமடைய வேண்டிய அலகுக் கிரயம் வழமைக்கு மாறாக முரண்பட்டிருந்தது. பொறியியலாளர் மதிப்பீட்டைத் தயாரித்த நிறுவகத்தால் மொத்தக் கிரயம் தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) செயற்திட்டத்தின் பொறியியல் மதிப்பீட்டு விடயங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரரின் 67 மதிப்பீட்டு விடயங்களினதும் பெறுமதிகள் வழமைக்கு மாறாக சமப்பட்டிருந்த காரணத்தால் செயற்திட்ட ஆலோசகர் கம்பனியும் ஒப்பந்தக்காரருக்கும் இடையே ஓர் தொடர்பு உள்ளமைக்கு கணக்காய்வில் மறுக்க முடியாதிருந்தது.

(vi) பக்கேஜிற்கு VI உரிய இறங்குதுறை அணை, நுழைவுப் பாலம் மற்றும் கரையோர உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற செயற்பாடுகளுக்கு ரூபா 29,948,360 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2014 யூலை 17 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 மே 06 ஆம் திகதி கணக்காய்வின் மூலம் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்படுகையிலும் இதற்கு உரித்தான நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இதற்காக ரூபா 3,676,251 தொகையான துணைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமையும் அதில் ரூபா 2,662,072 தொகையான மேலதிக வேலை (Extra Works) உள்ளடக்கப்பட்டிருந்தமையும் இக் கொடுப்பனவு ஆலோசனைக் கம்பனியால் பரிந்துரை செய்யப்பட்டதன் காரணமாகவும் கவனக்குறைவாக செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vii) பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டவாறு ஒப்பந்தக்காரரால் களமெட்டிய துறைமுக நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்கு 02 வாகனங்கள் வழங்குவதற்கும் இதற்கு உரித்தான செலவினங்களை வழங்குவதற்கும் உடன்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட ஓர் வாகனம் செயற்திட்டப் பணிப்பாளரின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டதன் காரணமாக அவ் உத்தியோகத்தரின் சுதந்திரத்தன்மை சவாலிற்கு உட்பட்டிருந்தது. அவ்வாறு

வழங்கப்பட்டிருந்த வாகனம் செயற்திட்டப் பணிப்பாளர் முன்னர் பயன்படுத்திய வாகனமானதுடன் 09 மாதங்களிற்கு அவ் வாகனத்தின் எரிபொருட் செலவினம் ரூபா 171,605 ஆக இருக்கையில் ஒப்பந்தக்காரர் வாகனத்தை வழங்குகையில் ஒரு மாதத்திற்கு ரூபா 165,000 தொகைப்படி எரிபொருள் செலவினம் மதிப்பிடப்பட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தமையால் உள்ளபடியான செலவினத்தைப் பார்க்கிலும் எட்டு மடங்களிற்கு மேலான ஓர் செலவினம் செயற்திட்டத்தால் ஏற்கப்பட வேண்டியிருந்தது.

(viii) 2014 திசெம்பர் 08 ஆம் திகதி முதல் செயற்திட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட வேலைத்தள பொறியியலாளரிற்கு ஒப்பந்தக்காரர் மாதாந்தம் ரூபா 100,000 படியான சம்பளத்தைச் செலுத்தி அச் சம்பளம், பட்டியல்களிற்கு உள்ளடக்கி செயற்திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு செயற்திட்டத்தால் நியமிக்கப்பட்ட பொறியியலாளரின் சம்பளம் ஒப்பந்தக்காரர் மூலம் செலுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை செயற்திட்டப் பதவியணியின் சுதந்திரத்தன்மையை சர்ச்சைக்கு உட்படுத்தியிருந்தது. இப் பொறியியலாளரை ஆட்சேர்த்தல் அவரின் சம்பளம் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதி 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) ஒப்பந்தக்காரரால் வதிவிட பொறியியலாளர் ஒருவரும் சேவை வழங்கும் பதவியணிக்குமாக அலுவலக இடவசதிகளும் அலுவலக உபகரணங்களும் தங்குமிட வசதிகளும் தளபாடங்களும், ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 மே 06 ஆம் திகதி வரையிலும் அச் சொத்துக்களில் சில சொத்துக்கள் விளைவற்றிருந்தமை மற்றும் சில குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரருக்கு இதற்காகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(x) செயற்திட்டக் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட தனியார் காணி 1879/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அரசாங்கத்தால் 2014 செப்தெம்பர் 11 ஆம் திகதி கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் இதற்கான நட்டஈடு வழங்கப்படுவதற்கு 2015 யூலை 15 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) மருதானை நங்கூரமிடற் பகுதி நிர்மாணிப்பு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 2.2.1 ஆம் 2.4.1 ஆம் வழிகாட்டல்கள் மற்றும் 2013 செப்தெம்பர் 05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு மாறாக போட்டி விலைமனுக் கோரல் இன்றி மருதானை நங்கூரமிடற் பகுதி நிர்மாணிப்பு ஒப்பந்தம் ரூபா 200 மில்லியனிற்கு அரசாங்கக் கம்பனி ஒன்றிற்கு 2013 ஒக்டோபர் 23 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) நேரடி ஒப்பந்தம் வழங்கப்படுகையில் உரிய கம்பனியின் சாத்தியவளம் தொடர்பாக கொள்வனவுக் குழு திருப்திக்கு உட்பட

வேண்டிய போதிலும், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகு உற்பத்தி மற்றும் விற்பனைக்காக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கக் கம்பனிக்கு நிர்மாணிப்பு ஒப்பந்தம் ஒன்றை ஒப்படைப்பதற்கு கொள்வனவுக் குழு அங்கீகாரம் அளித்தமை சர்ச்சைக்குரிய விடயமாகியிருந்தது. எவ்வாறெனினும், அக் கம்பனி அமைச்சுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கை மீறப்பட்டு ஒப்பந்தத்தின் நிர்மாணிப்பு வேலைகள் ரூபா 62,000,000 இற்கு உப ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தத்திற்காக விலைமனுக் கோரப்படுவதற்கு முன்னர் விபரமான கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கொள்வனவு நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்திராததுடன் அம் மதிப்பீடு ஒப்பந்தக்காரராலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

(iv) குறித்த ஒப்பந்தத்தின் மேற்பார்வை மற்றும் நிர்வாகம் போன்ற விடயங்கள் அரசாங்கக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருக்கையில் இதில் 10 மாதங்களின் பின்னர் ஒப்பந்தத்தின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்திற்காக ஓர் ஆலோசனை நிறுவகம் ஒன்று நியமிக்கப்படுவதற்கும் இதற்காக ரூபா 5,248,886 கொடுப்பனவு செய்யப்படுவதற்கும் செயற்திட்டக் கொள்வனவுக் குழு அங்கீகரித்திருந்தமை சர்ச்சைக்குரிய தன்மைக்கு உட்பட்டது. இங்கு கொள்வனவுக் குழு ஆலோசனை நிறுவகம் நியமிப்பதை அங்கீகரிக்கப்பட முன்னர் அமைச்சு உரிய நிறுவகத்துடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தி இருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

(v) செயற்திட்டத்திற்காக அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 5.4.4(1) ஆம் வழிகாட்டலிற்கு முரணாக அக் கம்பனிக்கு முற்பணப் பிணை இன்றி ரூபா 40,000,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் வழங்கப்படுகையில் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 5.4.8 வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றல் பிணையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(கே) நீர்கொழும்பு களப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நீர்கொழும்பு களப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் அடிப்படைச் செயற்பாட்டிற்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு போட்டி விலை மனுக் கோரல்கள் கோரப்படாது அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 3.3 வழிகாட்டலின் பிரகாரம் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் 2014 திசெம்பர் 24 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

(ii) மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமைச்சரவை கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக அம் மொத்தக் கிரய மதிப்பீடும் உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவ்வப்போது தயாரிக்கப்பட்ட அமைச்சின்

கொள்வனவுக் குழுவிற்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படும் செயற்பாடொன்று பின்பற்றப்பட்டிருந்தது. அடிப்படைச் செயற்பாட்டிற்காக இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 99 மில்லியன் தொகையான மதிப்பீட்டின் படி அக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்படுகையில் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 வழிகாட்டலின் படி, அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது பின்னர் உரிய ஒப்பந்தப் பெறுமதி ரூபா 99.997 மில்லியன் தொகைக்குத் திருத்தப்பட்டு ஓர் மதிப்பீடு கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iv) உரிய மதிப்பீட்டின் அடிக்கல் நாட்டுவது மற்றும் அதனோடொத்த செயற்பாடுகளுக்கு மதிப்பிடப்பட்ட ரூபா 5 மில்லியன் பெறுமதி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகை கூட்டுத்தாபனத் தலைவரால் நீர்கொழும்பு களப்புச் செயற்திட்டத்தின் ஆரம்ப வைபவத்திற்காக தனியார் நிறுவகம் ஒன்றிற்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த நிறுவனம் விலைமனுக் கோரலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிராததுடன் அந் நிறுவனம் சமர்ப்பித்திருந்த ரூபா 8,950,000 தொகையான மதிப்பீடு திறப்பு விழாவிற்கு உரித்தான போதிலும் ஒவ்வொரு விடயத்திற்கான கிரயம் வெவ்வேறாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்டத்தின் ஆரம்ப வைபவத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் தொகையான முற்பணம் 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன் செயற்திட்டச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) களப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டுவது சாதாரண செயற்பாடாக இருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 8.9 மில்லியன் தொகையான மதிப்பீட்டின் படி அவ் அரச நிதி சிக்கனத்துடன் பயன்படுத்தப்படும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) இச் செயற்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பு அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிராத போதிலும் செயற்திட்டப் பணிப்பாளரின் அங்கீகாரத்தில் ரூபா 574,080 செலவில் ஒருங்கிணைப்பு அலுவலகத்திற்கு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ் அலுவலகம் 2015 மார்ச் 31 ஆம் திகதி மூடப்பட்டிருந்தது. இதன் படி, கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் அங்கீகாரம் இன்றி இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

(viii) செயற்திட்டத்திற்கு உரிய களச் சுற்றுலாவிற்கு 2014 யூலை 18 ஆம் திகதி 103 பேருக்கு உணவு பெற்றுக்கொள்வதற்காக நீர்கொழும்புப் பகுதியின் விழா மண்டபத்திற்கு ரூபா 103,600 செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவிற்காக முன்னங்கீகாரம்

பெறப்பட்டிராததுடன் அப் பிரிவினரை பார்வைச் சுற்றுலாவில் கலந்துகொள்ளச் செய்து அவர்களை உபசரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் சிக்கனமற்ற ஓர் செலவினமாகியிருந்தது.

(கை) கைகாவல நங்கூரமிடற் பகுதி நிர்மாணிப்புச் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இச் செயற்திட்டத்திற்கு ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படுகையில் தகைமை பெற்றிருந்த ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த நிறுவகம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரை செய்திருந்த போதிலும் அப் பரிந்துரை கருத்திற்கொள்ளப்படாது செயற்திட்டக் கொள்வனவுக் குழு இதற்கு மேற்பட்ட விலை மனுக் கோரலைச் சமர்ப்பித்த ஓர் நிறுவனத்தை அங்கீகரித்திருந்தமையால் அரசாங்கத்திற்கு ரூபா 1,583,000 தொகையான பண நட்டம் நேர்ந்திருந்தது. அத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவகத்தின் பதவியணியினரின் பிரபல்யமே இத் தேர்விற்குக் காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவனம் போதிய பதவியணியின்றி மருதானை, பராலிய, கப்பரதொட, களமெட்டிய போன்ற மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடற் பகுதிகளை நிர்மாணிக்கும் ஆலோசனை நிறுவனமாக செயற்பட்டிருந்தது.

(ii) இந் நங்கூரமிடற் பகுதி நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா .245,800,810 தொகையானதுடன் இது ரூபா 245,170,850 தொகையான பொறியியல் மதிப்பீட்டை ரூபா 629,960 தொகையால் மிகைத்திருந்தது.

(iii) நங்கூரம் இடற்பகுதி நிர்மாணிக்கப்படுவதற்கு ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுப்பதற்கு பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விலை மனுக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறப்பட்டிருந்த விலைமனுக் கோரல்களைக் கவனத்தில் கொள்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமையாக சமுத்திர நிர்மாணிப்புகள் ரூபா 700 மில்லியனிற்கு மேலாக மேற்கொண்டிருக்க வேண்டும் எனும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டு பின்னர் செயற்திட்டப் பணிப்பாளரால் இச் சமுத்திர நிர்மாணிப்புகளின் கிரய எல்லை ரூபா 500 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்த போதிலும் அத் திருத்தம் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இரு விலை மனுதாரர்கள் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர். இங்கு அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 1.2(இ) வழிகாட்டலின் பிரகாரம் நியாயமானதும் சமமான ஆகக் கூடுதலான சந்தர்ப்பங்கள் அதில் அக்கறை காண்பிக்கும் நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆலோசனைக் கம்பனி பொறியியல் மதிப்பீட்டைத் தயாரிக்கையில் 02 செயற்திட்டப் பொதிகளுக்காகப் பகிரப்பட்டிருந்த பொதி I மற்றும் பொதி II இற்காக மூலக் கிரயம் முறையே ரூபா 24,643,000 ஆகவும் ரூபா 21,768,000 ஆகவும் இருந்தது. அங்கு ஆரம்பச் செலவின அளவீட்டுப் பத்திரத்தின் 40 விடயங்களில் 04 விடயங்கள் தவிர்ந்த ஏனைய 36 விடயங்களிற்காக 02 பொதிகளிற்கும் சமமான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன்

அங்கு ஆரம்பச் செலவினம் இரு தடவைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக கிரயம் மிகைக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(v) பொதி I மற்றும பொதி II இற்காக அலைதாங்கியின் நீளம் முறையே 800 சங்கிலியாகவும் 700 சங்கிலியாகவும் இருக்கையில் பொறியியல் மதிப்பீட்டில் பட்டியல் இல. 02 இன் கீழான Dredging Excavation and Earth work இல் காண்பிக்கப்பட்டிருந்த அளவீட்டுப் பத்திர விடயங்களின் அலகு எண்ணிக்கைகளும் கிரயமும் வழமைக்கு மாறாக சமனாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(vi) செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் செயற்திட்டப் பணிப்பாளரால் 2014 திசெம்பர் 29 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்ட உடன்படிக்கையின் 8.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் வளாகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள், உழைப்பு மற்றும் வாகனங்கள் என்பவற்றிற்காக 2015 சனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்கு ரூபா 27,440,142 தொகையான (பெறுமதி சேர் வரி இல்லாது) பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(vii) கைகாவல நங்கூரமிடற் பகுதியின் திறப்புவிழா விபரம் பொறிக்கப்பட்ட கருங்கல் ஞாபகார்த்தக் கல்லிற்காக குறித்த பகுதியில் ஸ்தாபிப்பதற்கான செலவினம் ரூபா 47,500 ஆக இருக்கையில் களமெட்டிய மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள கருங்கல்லில் ஞாபகார்த்தக் கல்லைத் தயாரிப்பதற்கு ரூபா 200,000 செலவிடப்பட்டிருந்தமை சிக்கனமற்ற செலவினமாகக் காணப்பட்டது.

(கொ) 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தால் கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.10.2 திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகச் செயற்திட்டம்

இச் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூலை மாதம் 11 ஆம் திகதிய அமை/14/0749/532/00/-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மீன்பிடித் துறைமுகம், நங்கூரமிடற் பகுதி மற்றும் இறங்குதுறை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு 2014 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 2,000 மில்லியன் தொகையான ஏற்பாட்டில் திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தின் எஞ்சிய வேலையைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 128 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 80 மில்லியன் தொகை இச் செயற்திட்டத்தின் மூலம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 48 மில்லியன் தொகை அதாவது 3.75 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறித்த செயற்திட்டத்தில் இருந்து ரூபா 201,260,414 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கையேற்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நிர்மாணிப்புக் கிரயம் ரூபா 8,229,278,640 ஆகக் காணப்பட்டது. துறைமுகத்தின் நிர்மாணிப்புகள் பூர்த்தியானதை அடுத்து அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் துறைமுகங்கள் மற்றும் அதன் சொத்துக்கள் சட்டரீதியாக கையேற்கப்படுவதற்கு 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டின் படி, ரூபா 57,254,733 தொகையான சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் மற்றும் ரூபா 4,493,774 தொகையான சொத்துக்கள் மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் காணப்பட்டன. மேலும், செயற்திட்டத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒன்று ரூபா 7,695,902 தொகையான 5 டபிள் கெப் வண்டிகளில் இரண்டு மீன்பிடி, நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கும், தலா ஒவ்வொரு வண்டி இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கும், வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்கும் மீன்பிடித் துறைமுகங்கள் நங்கூரமிடற் பகுதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் அலுவலகத்திற்கும் செயற்திட்டத்தால் நேரடியாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் வாகனங்கள் மீன்பிடி, நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் மூலம் ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதற்காக வழங்கற் கட்டளையோ அல்லது பொருட் பெறுவனவுச் சிட்டையோ பொறுப்பேற்கப்பட்டமைக்கு வேறு ஆவணமோ அல்லது குறித்த நிறுவகத்திலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் மூலம் படகு நிர்மாணிப்புச் செயற்பாடு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்டத்தால் படகு தயாரிக்கும் கணனி மென்பொருள் அனுமதிப்பத்திரம் ஒன்று 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி ரூபா 9,664,584 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக் கணனி மென்பொருள் கொள்வனவாளராக வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 நவம்பர் 09 ஆம் திகதிய செயற்திட்டக் கொள்வனவுக் குழு 42,250 ஸ்டேர்லிங் பவுண்களிற்கு (ரூபா 7,520,500) மென்பொருளைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகரித்திருந்த போதிலும் மீள அக் குழு 2014 மே 17 ஆம் திகதி புதிய விலைக் கோரலை மேற்கொண்டு மென்பொருளின் பயன்பாட்டுத் தன்மை அதிகரித்திருந்ததாகக் குறிப்பிட்டு 44,225 ஸ்டேர்லிங் பவுண்களிற்கு (ரூபா 9,243,025) மென்பொருள் கொள்வனவு செய்வதற்கு அங்கீகரித்திருந்தமையால் ரூபா 1,722,525 தொகை மேலதிகமாகச் செலுத்தப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) இம் மென்பொருள் அனுமதிப்பத்திர உடன்படிக்கை 2013 சனவரி 07 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தமையால் கணக்காய்வுத் தினம்

வரையில் கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளும் 06 மாதங்களும் கடந்திருந்த போதிலும் அக் காலப்பகுதியின் போது இம் மென்பொருள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிராமையால் விளைவற்ற சொத்தாகியிருந்தது. மேலும் உடன்படிக்கையின் படி அனுமதிப்பத்திரக் காலம் 2018 சனவரி 07 ஆம் திகதி பூர்த்தியடைவதற்கிருந்தது.

(உ) திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகச் செயற்திட்டத்தின் ஏற்பாட்டில் ரூபா 180 மில்லியன் தொகை செலவிடப்பட்டு வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் மட்டக்குளியவின் படகுப் பிரிவு திருத்துவதற்கான செலவினத்தைத் தீர்க்கும் முறையாக மீனவர்களுக்கு சலுகை விலையில் படகுகளையும் வள்ளங்களையும் திருத்திக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. இதற்காக தீர்மானத்திட்டம் ஒன்று தயாரிக்குமாறு 2013 சனவரி 13 ஆம் திகதி பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அத்தகைய தீர்மானத் திட்டம் ஒன்று கணக்காய்வுத் தினமான 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10.3 செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல்**

மாசிக்கருவாடு உற்பத்தியின் மூலம் விரயமாகும் மாசிக் கருவாடுகளில் இருந்து ஓர் உற்பத்தியான போசனையூட்டும் உணவு உற்பத்திக்கு அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 2,150,000 தொகையான ஏற்பாடு அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

**3.10.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்**

அமைச்சினால் சில செயற்திட்டங்களுக்காக பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களின் வெற்றிகரமான ஓர் முன்னேற்றத்தைப் பெற்றிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீன் சுப் கட்டிகளின் உற்பத்திக்காக ரூபா 500,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 400,000 பயன்படுத்தப்பட்டு சுப் கட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. எனினும், 2015 யூலை மாதம் அளவில் இது சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டு விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யாழ்ப்பாண தபாற் கந்தோர் சந்தியில் ரூபா 1,700,000 மதிப்பிலான பெறுமதிக்கு மீன் விற்பனை நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எதிர்பார்த்த இலக்கை அடையத் தவறியிருந்ததுடன் அன்றைய தினத்தில் அப் பணியின் முன்னேற்றம் 25 சதவீதம் மாத்திரமேயாக இருந்தது.

(இ) கம்பஹா மாவட்டத்தின் சீதுவ, முகலன்கமுவ, மெல்வத்த நல்லிணக்க மகளிர் மீன்பிடிச் சங்கத்தின் சமூக மண்டப நிர்மாணிப்பிற்காக ரூபா 250,000 மதிப்பிடப்பட்டு குறித்த பணம் கம்பஹா மாவட்டச் செயலாளரிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அதன் பௌதீகச் செயலாற்றல் 50 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்டது.

(ஈ) 02 தாய்ப்படகுகள் ரூபா 326,016,000 இற்குக் கொள்வனவு செய்யப்படுவதற்கு 2007 ஆம் ஆண்டின் போது அமைச்சு வெளிநாட்டு வழங்குனருடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தி 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் இதற்காக ரூபா 113,556,801 செலுத்தியிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆளமான கடலில் மீன் வளத்தை ‘‘மருவல்பத்த’’ முறையைப் பயன்படுத்தி பிடிப்பதற்காகவும் பலநாள் மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான உள்ளீடுகள், எரிபொருள், உணவுப் பொருட்கள், ஐஸ், பிடிக்கப்பட்ட மீன்கள் பழுதாகாது பாதுகாக்கும் பொருட்டு தேவையான குளிரூட்டி வசதிகளுடன் தாய்ப் படகுகள் இரண்டு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 09 ஆண்டுகள் கடந்திருந்திருந்த போதிலும், அந் நோக்கை அடைந்து கொள்வதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

(ii) மேலும் இச் செயற்திட்டத்திற்கு 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவ் ஏற்பாடுகளில் ரூபா 541,018,038 வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. 2013 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 13/1103/532/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தில் நிலவும் வளங்கள் ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறும் செயற்பாடு தொடர்பில் பாரிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(iii) 2013 ஒக்டோபர் 31 ஆம் திகதி படகு வழங்கல் தொடர்பாக வழங்குனருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி கடன் கடிதம் ஆரம்பிக்கப்பட்டு 09 மாதங்களிற்குள் 02 தாய்ப் படகுகள் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையில் அம் மீன்பிடிப் படகுகள் ஒப்படைக்கப்பட்டிராததுடன் ஒப்படைப்பதிலான தாமதம் தொடர்பில் செயற்பட வேண்டிய விதம் குறித்து உடன்படிக்கையின் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாதிருந்தது.

(iv) படகுகள் இயங்குவதற்கு தேவையான தொழில்நுட்ப மாதிரிகள் அபிவிருத்தி செய்து ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படுவதற்கு ஓர் அரசாங்கக் கம்பனியுடன் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,544,726 செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவிற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் தொழில்நுட்ப மாதிரிகள் உள்ளடக்கப்பட்ட எவ்வித அறிக்கையும் 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையில் படகுகள் கொள்வனவு செய்யப்படும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமையால் இச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 113,556,801 தொகை அரசாங்கத்திற்கு நேர்ந்த நிதி நட்டமாக அவதானிக்கப்பட்டது.

**3.10.5 பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படாது பணம் விடுவிக்கப்பட்டமை**

2014 திசெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 16,523,074 பெறுமதியான மீன்பிடிப் படகுகள் மற்றும் 203 மிதவைகள் மற்றும் 1,585 மீன்பிடி வலைகள் நீர் வாழ் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படுவதற்கான கட்டளைகள் பெறப்பட்டிருந்தன. வழங்குனரால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 8,005,588 பெறுமதியான பொருட்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் குறித்த உதிரிப்பாகங்களுடன் சரியாகக் கிடைக்கப்பெற்றமைக்கும் அப் பொருட்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டமைக்கான ஓர் உறுதிப்படுத்தல் பெறப்படாது அமைச்சால் ரூபா 14,079,500 வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2014 நிதித் திட்டத்தின் படி, ரூபா 16,523,074 கிரயமான நன்னீர் மீன்பிடி உள்ளீடுகள், 11 மாவட்டங்களில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் 10 மாவட்டங்களிற்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டிராததுடன் இவை தொடர்பாக அமைச்சால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.11 செயலாற்றல்**

2014 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) கரையோரப் புனரமைப்பு மற்றும் வள முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் கட்டிட நிர்மாணிப்பிற்காக ரூபா 43,810,000 தொகையான ஏற்பாடு மீட்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் ஏற்பாடுகளில் அச் செயற்திட்டத்தின் நோக்கங்களிற்கு முரணாக மீன்பிடி உபகரணங்களின் கொள்வனவு, மீனவர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் நிர்வாகச் செலவினம் மற்றும் ஏனைய செலவின விடயங்களிற்கு ஏற்பாடு மாற்றப்படுவதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 40,119,509 தொகையான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டில் 8.4 சதவீத அளவு மாத்திரமே எதிர்பார்க்கப்பட்ட பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) குருநாகல், புத்தளம், கேகாலை போன்ற மாவட்டங்களில் மீன்பிடிச் சமூகத்திற்கான உபகரணக் கொள்வனவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 15,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் ஏற்பாடுகளில் ரூபா 5,040,000 தொகை 2014 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இங்கு குறித்த மாவட்டங்களின் மீன்பிடிச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக திட்டமிடப்பட்ட இலக்கை எய்துவதற்கு அமைச்சு தவறியிருந்ததுடன் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீன்பிடிப் பிரிவின் முன்னேற்றம் 60.2 சதவீதம்

மாத்திரமாகக் காணப்பட்டது.

(இ) தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மீன் சந்தைக்கு மின்சாரம் வழங்கி நுழைவுப் பாதை நிர்மாணித்தல் போன்ற அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ரூபா 150,000 தொகை செலவிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கையில் அதன் நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றலின் முன்னேற்றம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரனம நீர்வாழ் உயிரினங்களின் வளர்ப்புச் செயற்திட்ட அலுவலகங்களின் நிர்மாணிப்பிற்காக ரூபா 225,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் செலவினம் ரூபா 169,707,103 தொகையானமையால் குறித்த பணியின் நிதிச் செயலாற்றல் 75 சதவீதமாகக் காணப்பட்டது.

(உ) மீனவர் சமூகத்தை பலப்படுத்துவதன் கீழ் மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக அரச கம்பனி ஒன்றிற்கு ரூபா 48.92 மில்லியன் தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் பௌதீகச் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் 2014 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீனவர் சமூகத்தை உறுதிப்படுத்தும் விடயத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட 12 செயற்திட்டங்களிற்காக விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 20.01 மில்லியன் தொகை தொடர்பாக நிதி முன்னேற்றமோ அல்லது பௌதீக முன்னேற்றமோ 2014 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வட மாகாணத்திற்கான கடலில் படுக்கையில் விரிக்கப்படும் மீன் வலைகளிற்குப் பதிலாக மாற்று வலைகள் வழங்கப்படுவதற்காக ரூபா 16.85 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகளின் பௌதீகச் செயற்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.12 வங்கிக் கணக்குகள் பேணலிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

அமைச்சால் பேணப்பட்ட 04 நடைமுறைக் கணக்குகளில் 03 கணக்குகள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூச்சிய மீதியைக் கொண்டிருந்ததுடன் ஒரு நடைமுறைக் கணக்கில் 5 ஆண்டுகள் 6 மாதங்கள் முதல் ரூபா 28,618 தொகையான சாதகமான மீதி ஒன்று செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிராமை

2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 05 வங்கிக் கணக்குகளுக்கு உரித்தான ரூபா 140,774,386 கூட்டுத்தொகையான மீதிகளின்

உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.14 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தேசிய மீன்பிடி மஹா சம்மேளனம் எனும் பெயரில் 2013 யூன் 12 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த பொதுக் கம்பனிக்கு செலவினத்திற்காக அமைச்சால் ரூபா 3,188,188 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

**3.15 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருந்த முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள் சில பின்வருமாறாகும்.

(அ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் செயற்பாடுகளிலிருந்து விலகல்

(i) சிற்றுண்டிச்சாலை நடாத்தப்படுவதற்கு ஓர் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அமைச்சால் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கப்படுகையில் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 3.2 ஆம் வழிகாட்டலின் படி போட்டி விலைகள் கோரப்பட்டு குத்தகையாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 6,516,009 கிரயப் பெறுமதியான சிற்றுண்டிச்சாலைப் பொருட்கள் குத்தகையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இதற்குப் போதிய பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 5.3.13 ஆம் வழிகாட்டலிற்கு மாறாக ரூபா 60,000 தொகையான பிணை வைப்பு 02 தவணைகளில் செலுத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ii) அமைச்சின் வளாகத்தில் நிர்மாணிப்புகள்

அமைச்சின் கட்டிடத்திற்கு நுழையும் VIP பிரதான கதவைப் பொருத்துவது, முக்கிய பிரமுகர்களின் 03 வாகனத் தரிப்பிடங்கள் நிர்மாணிக்கப்படுவது மற்றும் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கப்படுவதற்கு கற்கள் இடப்படுவது போன்ற செயற்பாடுகள் ரூபா 1,450,327 இற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இச் செயற்பாடுகளிற்காக அமைச்சினால் மதிப்பீடு தயாரிக்கப்படாது தனியார் நிறுவகம் ஒன்றால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைக் கோரல்கள் மதிப்பீடாகக் கருதப்பட்டு அமைச்சு சிறிய கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தில் இச் செயற்பாடுகள் அந் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன.

- இங்கு அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 3.3 மற்றும் 3.4 வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஆகக் கூடுதலான பொருளாதார நன்மை ஒன்றை அரசாங்கத்தினால் அடைந்து கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 3.8 வழிகாட்டலின் பிரகாரம் அவசரமான கொள்வனவு நடவடிக்கைகள் என்ன என்பது குறிப்பிடப்பட்டிருக்கையில் இதற்கு முரணாக அவசரமான கொள்வனவு நடவடிக்கையாக மேற்குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரப்பொறுப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

----------------------------------------------------------

அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையான அதிகாரப் பொறுப்பின்றி மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(i) சிரேஷ்ட பதவியணி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படல்

----------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சிரேஷ்ட பதவியணி உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ மற்றும் செயலாற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்குச் செலவிடப்பட்ட ரூபா 822,029 தொகையில் ரூபா 467,029 தொகை 139-02-03-05-2502 ஆம் இலக்க “மீனவ சமூக வலுவாக்கல்” செலவின விடயத்திற்கான ஏற்பாடுகளில் இருந்து செலவிடப்பட்டிருந்தன.

- கலாவெல, தேசிய நீரியல் வள வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைப் பயிற்சி நிலையத்தின் 69 சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களிற்காக 2014 ஆகஸ்ட் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் ஓர் மாநாடு நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக 140 உத்தியோகத்தர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு ரூபா 508,554 தொகை செலவிடப்பட்டிருந்தது.

- சகல உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி நிலையத்திற்குச் செல்வதற்கும் வருவதற்கும் ரூபா 72,800 செலவில் தனியார் நிறுவனம் ஒன்றால் விசேட பஸ் வண்டி ஒன்று பெறப்பட்டிருந்த போதிலும், சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் அமைச்சின் வாகனங்களில் பயணித்திருந்த காரணத்தால் இதற்காக எரிபொருட்களிற்கு ரூபா 74,918 செலவிடப்பட்டிருந்தது.

- தனிப்பட்ட நிலையில் பங்கேற்றிருந்த செயலமர்வின் வளவாளர்களுக்கு 1 மணித்தியாலம் 45 நிமிடங்களிற்கு ரூபா 30,000 தொகையும், 4 மணித்தியால விரிவுரைக்கு ரூபா 85,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அவ் வளவாளர்கள் நியமிக்கப்பட்டமை மற்றும் அவர்களுக்கான கொடுப்பனவு அடிப்படை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பயிற்சிச் செயலமர்விற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த அமைச்சின் 03 வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் படி, அக் காலப்பகுதியின் போது 2,338 கிலோ மீற்றர்கள் பயணிக்கப்பட்டிருந்தன. அச் செயலமர்வு நடாத்தப்பட்ட கால எல்லையில் கலாவெவ, தம்புத்தேகம, கெகிராவ, கல்கமுவ மற்றும் எப்பாவல ஆகிய பகுதிகளில் 573 கிலோமீற்றர்கள் பயணித்திருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாகியிருந்தது.

**3.16 நட்டங்களும் இழப்புகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆகஸ்ட் 11 ஆம் திகதி மாத்தளை பிரதேசத்தில் அமைச்சின் ஓர் வாகனம் அப் பிரதேசத்திற்கு கடமை ஒப்படைப்போ அல்லது வாகனத்திற்குப் பொறுப்பாகப் பயணித்த ஓர் உத்தியோகத்தரோ இன்றி ஓட்டத்தில் ஈடுபட்டிருக்கையில் விபத்திற்கு உட்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ் விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சின் சாரதி ஒருவர் அவ் வாகனச் சாரதியாகச் செயற்பட்டிருக்கவில்லை.

(ii) விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விபத்திற்கு உட்பட்ட வாகனம் பழுதுபார்க்கப்படுவதற்கான மதிப்பீடு ரூபா 512,000 தொகையானதுடன் வாகனம் மாத்தளை முதல் கொழும்பிற்குக் கொண்டு வருவதற்கு ரூபா 24,000 அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. குறித்த காப்புறுதிக் கம்பனியால் விபத்திற்காக அறவிடக்கூடிய ஆகக் கூடுதலான பெறுமதி ரூபா 300,000 என்பதனால் விபத்தின் காரணமாக ரூபா 238,080 தொகையான நட்டம் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் வாகனம் திருத்தப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிராததுடன் 02 வருடங்களிற்கு அண்மித்த காலமாக இயற்கை அனர்த்தங்களிற்கு உட்பட்டு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(v) இவ் வாகனத்தின் 2013 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள், விபத்திற்கு உரித்தாக அமைச்சால் நடாத்தப்பட்ட விசாரணை தொடர்பான தகவல்கள் மற்றும் மாத்தளை நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குத் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனத்திற்கு நேர்ந்த விபத்தில் ரூபா 939,173 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அந் நட்டம் வாகன விபத்துப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. காப்புறுதிக் கம்பனியால் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டு அந் நட்டம் அமைய அடிப்படையில் கடமையில் ஈடுபட்டிருந்த 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கடமையில் இருந்து விலகிய ஓர் சாரதியால் ஏற்பட்டிருந்தது. அந் நட்டம் குறித்த பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதற்கு சட்ட நடவடிக்கைகள் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சிடம் உள்ள 16 வாகனங்கள் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் விபத்திற்கு உட்பட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது. அந் நட்டம் தொடர்பாக அமைச்சினால் நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குத்தகைப் பணம் சரியாகக் கணிப்பிடப்பட்டிராததன் காரணமாக ஹிக்கடுவ மற்றும் பாணந்துறை மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்ட ஓர் கம்பனிக்கு குறைவாகச் செலுத்தப்பட்ட ரூபா 11,159,159 தொகையான குத்தகைப் பணமும் அதற்கு உரித்தான வட்டித் தொகையான ரூபா 15,098,897 தொகையும் நீதிமன்றக் கட்டளையில் 2010 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 சனவரி 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உள்ளக பரிசோதனையின் படி, ரூபா 15,098,897 தொகையான நட்டம் உத்தியோகத்தர்களின் முறைகேடு அல்லது தாமதம் காரணமாக இருக்கவில்லை என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் பின்வரும் அவதானிப்புக்கள் காரணமாக அந் நட்டங்கள் உத்தியோகத்தர்களின் கவனக் குறைவினாலும் தாமதத்தினாலும் நேர்ந்திருந்தது. ஆகையால் அந் நட்டம் தொடர்பாக பதிவேட்டில் பதியப்பட்டிராததுடன் குறித்த பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- குத்தகைத் திருத்தத்திற்கு இணங்க உடன்படிக்கை திருத்தப்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கைகளின் சரியான தன்மை குறித்து கொடுப்பனவை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர் பொறுப்புக் கூற வேண்டும்.

- வழக்குத் தீர்ப்பு 2007 சனவரி 26 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தீர்ப்பின் படி, கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் நாள் வரையும் வட்டி செலுத்தப்பட வேண்டியமையால் குறித்த கொடுப்பனவைத் துரிதப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் வழக்குத் தீர்ப்பின் ஓர் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு 2009 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையிலும், மேன்முறையீடு செய்ய முடியாதென 2009 ஏப்ரல் 29 ஆம் திகதி சட்டமா அதிபரால் அறிவித்ததை அடுத்து திறைசேரியால் ஏற்பாடு கோரப்படுவதற்கு 2009 ஒக்டோபர் 19 ஆம் திகதி வரையிலும் தாமதமாக்குவது தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்கள் பொறுப்புடையவர்களாவர்.

- 2009 ஏற்பாடுகளில் இருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து மீள அறவிட்டுக்

கொள்ளுமாறு தேசிய பாதீட்டுப் பணிப்பாளரால் செயலாளருக்கு 2009 திசெம்பர் 16 ஆம் திகதி அறிவித்திருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இது தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு 2013 சனவரி 13 ஆம் திகதி பாராளுமன்ற கணக்குகள் குழுக் கூட்டத்தில் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இதன் படி ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு ஓர் அறிக்கை அனுப்பிவைக்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அமைச்சுக் கட்டிடத்தின் ஆறாவது மாடியில் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் மொத்தப் பதவியணியினருக்காக கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிராததன் காரணமாக மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மூலப்பொருட்களிற்காகச் செலவிடப்பட்ட ரூபா 159,477 தொகை அமைச்சிற்கு நேர்ந்த நட்டமாகியது.

**3.17 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட சிக்கனமின்றி ஏற்படுத்தப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**3.17.1 இந்து சமுத்திர மீன்பிடி மாநாடு**

2014 மே 26 ஆம் திகதி முதல் யூன் 05 ஆம் திகதி வரை இந்து சமுத்திர மீன்பிடி மாநாடு மற்றும் இதற்கு இணையாக நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பான நிலையான குழுவின் 11 ஆவது அமர்வு மற்றும் இணைக் குழுவின் 11 ஆம் அமர்வு போன்ற மூன்று மாநாடுகள் இலங்கையில் நடாத்தப்படுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறித்த குழுக் கூட்டத்திற்காக மண்டப வசதிகள் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெற்றுக்கொள்ளும் போது ரூபா 460,625 தொகையான மிகை அறவீட்டுக் கட்டணம் அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அம் மிகை அறவீட்டுக் கட்டணம் தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முப்பரிமாணக் கூட்டத்திற்காகக் கலந்துகொண்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பிரதிநிதிகளின் எண்ணிக்கை முறையே 328 ஆகவும் 44 ஆகவும் காணப்பட்டது. எனினும், 500 பேருக்கு ஆவணக் கோவைகளும் ஞாபகார்த்த பரிசுகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் படி, 128 ஆவணக் கோவைகளுக்கு ரூபா 76,800 தொகையும் வெளிநாட்டு முகவர்களுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை வாசனைத் திரவியங்கள் அடங்கிய 172 ஞாபகார்த்த பரிசுகளுக்கு ரூபா 385,280 தொகையும் தேவைக்கு மேலதிகமாக அமைச்சால் செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ஞாபகார்த்த பரிசுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம் குறித்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு அந் நிறுவனத்துடன் அமைச்சு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அந் நிறுவனம் சமர்ப்பித்த ரூபா 19,840,552

தொகையான பட்டியல்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 16,522,867 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயலமர்விற்கு உரித்தாக தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரத்திற்காக எந்த அலைவரிசையைத் தேர்ந்தெடுக்க வேண்டும், எந் நபர்களைப் பங்கேற்கச் செய்ய வேண்டும், விளம்பரத்தின் உள்ளடக்கம் மற்றும் ஒலிபரப்புக் காலம் தொடர்பாக சேவை வழங்குனர் தெளிவூட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) தனியார் ஊடக நிறுவகம் ஒன்றிற்கு வானொலி ஒலிபரப்பை மேற்கொண்டமைக்கான பட்டியலிற்கு ரூபா 1,713,600 தொகையும் தொலைக்காட்சி ஒளிபரப்பை மேற்கொண்டமைக்கு தனியார் ஊடக நிறுவகம் ஒன்று சமர்ப்பித்த பட்டியலின் போட்டோ பிரதிக்கு ரூபா 3,976,409 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அப் பட்டியல்கள் எந்த விடயத்திற்காக, எந்த நிறுவகத்திற்கான விளம்பர ஒலிபரப்பிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது என்பதுவும் இவ் விளம்பரத்திற்கு உரிய திகதி, நேரம், ஒலிபரப்புக் காலம் மற்றும் ஒலிபரப்பப்பட்ட தடவைகள் போன்ற விபரங்கள் எதுவும் பெறப்பட்டிராததுடன் குறித்த ஊடக நிறுவகங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(iii) மாநாட்டின் ஆரம்ப நாளில் செயலமர்வு குறித்து விசேட செய்தி ஒன்று (Special count down) உள்ளடங்கலாக ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் செய்தித் தாள்கள் மூன்றில் முழுப் பக்கமாக பத்திரிகை விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்பட வேண்டும் என்ற புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 1,850,000 செலவிடப்பட்டு சிங்களப் பத்திரிகைகள் இரண்டிலும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலும் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் தமிழ் பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இங்கு சிங்களப் பத்திரிகைகள் 02 இல் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக மேலதிக சிங்கள விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்தமைக்காக ரூபா 493,920 தொகையான கொடுப்பனவு அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) பத்திரிகை விளம்பரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல் பெறுமதி ரூபா 1,507,520 தொகையானமையால் ரூபா 342,480 தொகை மேலதிகமாக சேவை வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) குறித்த சேவை வழங்குனர் விலைக் கோரல்களைச் சமர்ப்பிக்கையில் செயலமர்வின் 500 பிரதிநிதிகள் தங்கியிருந்த கொழும்பு ஹொட்டேல்களில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் வரை 10 நாட்கள் சொகுசு கார்கள், வான், பஸ் வண்டிகளைப் பயன்படுத்தி பயணித்தமைக்காக ரூபா 1,650,000 தொகையான மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்துகொண்ட மொத்த வெளிநாட்டுப் பிரமுகர்களின் எண்ணிக்கை 328 ஆனமையால் போக்குவரத்துக் கிரயம் ஒப்பீட்டு

ரீதியாகக் குறைந்திருக்க வேண்டிய போதிலும், விபரமான பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்படாது மொத்தத் தொகையும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(vi) மாநாட்டின் ஆரம்ப வைபவத்திற்கு 200 VVIP அழைப்பிதழ்கள் ரூபா 370,000 இற்கு அச்சிடப்படுவது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 250 அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டதன் காரணமாக கோரலோ அல்லது அங்கீகாரமோ இன்றி தேவைப்பாட்டிற்கு மேலாக அச்சிடப்பட்ட 50 அழைப்பிதழ்களுக்கு ரூபா 92,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(vii) 2014 யூன் 01 ஆம் திகதி கொழும்பு ஹொட்டேல் ஒன்றில் நிகழ்ந்த ஓர் மாநாட்டிற்கு உரிய இராப்போசன விருந்துபசாரத்திற்காகவும் 2014 யூன் 03 ஆம் திகதி மேலும் கொழும்பு ஹொட்டேல் ஒன்றில் நிகழ்ந்த பிரியாவிடை விருந்துபசாரத்திற்குமாக ரூபா 2,085,141 கூட்டுத்தொகையான ஓர் பட்டியல் அமைச்சால் நேரடியாக உரிய ஹொட்டேல்களிற்கு கொடுத்துத் தீர்க்கப்பட்டிருந்தது. சேவை வழங்கிய நிறுவனமும் அப் பட்டியலின் பெறுமதியை தமது பட்டியலில் உள்ளடக்கி ஹொட்டேல் பட்டியல் பெறுமதியை அதிலிருந்து கழித்திருந்த காரணத்தால் 15 சதவீத விழா முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 312,000 அந் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(viii) சேவை வழங்கிய நிறுவனத்தால் மாநாட்டு பிரமுகர்களுக்கு 500 கோவைத் தாங்கிகள் வழங்கப்படுவதற்காக ரூபா 795,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 662,500 தொகையான போதிலும் கொடுப்பனவு செய்கையில் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு விழா முகாமைத்துவக் கட்டணம் கணிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 19,875 தொகை அந் நிறுவனத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.17.2 மீன்பிடிச் சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கான சுய தொழில் நடைமுறைகள்**

நீர்கொழும்பு மாவட்டத்தின் மீனவர்களின் வாழ்வாதார அபிவிருத்தி செய்வதற்கு மீனவக் குடும்பங்களின் பெண்களுக்கு சுய தொழில் பயிற்சி மற்றும் சுய தொழிலுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 10,438,320 செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 18 வகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக 03 நிறுவகங்களில் இருந்து விலைக் கோரல்கள் பெறப்பட்டிருந்தன. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலிற்கு இணங்க ஆகக் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனத்தில் இருந்து அப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படாது அரசாங்க நிறுவகம் ஒன்றில் இருந்து ரூபா 10,438,320 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் அக் கொள்வனவில் ரூபா 1,341,856 தொகையான நிதிசார் நட்டம் நேர்ந்திருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் பொருட்கள் விநியோகிக்கப்பட்டமைக்கு அக் கம்பனி சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியலின் படியும் விளம்பரத்தின் படியும் ரூபா 1,194,380 தொகைக்கான உபகரணம் ஒப்படைக்கப்பட்டமைக்கோ அல்லது பொறுப்பேற்கப்பட்டமைக்கும், ரூபா 8,524,520 பெறுமதியான உபகரணம் நீர்கொழும்பு மாவட்ட மீன்பிடி அலுவலகத்தின் மூலம் கையேற்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வழங்குனருக்கு ரூபா 10,516,095 செலுத்துவதற்கு ஓர் காசோலை தயாரிக்கப்பட்டதை அடுத்து அது இரத்துச் செய்யப்பட்டு 2015 பெப்ரவரி 10 ஆம் திகதி பொது வைப்புக் கணக்கில் அப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) கொடுப்பனவுப் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 796,895 கூட்டுத்தொகைப் பெறுமதியான 04 வாயு அடுப்புகளுக்கும் 53 மகளிர் துவிச்சக்கர வண்டிகளுக்கும் விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டிராததுடன் அவை பொறுப்பேற்கப்பட்டமைக்கு எவ்வித சான்றிதழும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 600 பென்சில் பெட்டிகள் மற்றும் கணித உபகரணங்களுமாக 1,200 அலகுகள் விநியோகிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு ரூபா 217,800 தொகையான விலைப் பட்டியலிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்தகைய உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டமைக்கு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டோ அல்லது கட்டளையிடப்பட்டோ இருக்கவில்லை.

(உ) மேற்குறித்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பது தொடர்பாக பின்வரும் சர்ச்சைக்குரிய சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(i). 2014 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் சுய தொழில் பயிற்சி மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2014 ஆம் ஆண்டின் முக்கிய கொள்வனவுத் திட்டத்தின் படியும் அத்தகைய செயற்பாடொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). மீனவ சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்காக 06 சுயதொழில் செயற்திட்டங்களின் மூலம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் ஒரு செயற்திட்டத்தினால் கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை நேரடியாக மீன்பிடியுடன் தொடர்புபட்ட கைத்தொழிலாகக் கருதப்பட்டு இதற்காக ரூபா 102,500 செலவிடப்பட்டிருந்தது. மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் இச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இதன் படி, இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தையல் கைத்தொழில், உணவுத் தயாரிப்பு, வாசனைத் திரவிய உற்பத்தி, கோழி வளர்ப்பு மற்றும் பூக்கள் வளர்ப்பு போன்ற மீன்பிடிக் கைத்தொழிலுடன் தொடர்பற்ற செயற்திட்டங்களுக்கு ரூபா 10,516,095 செலவிடப்பட்டிருந்தது.

(iii). பதில் கடமையாற்றும் மீன்பிடி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட சுயதொழிலிற்கான உபகரணப் பட்டியல், சுயதொழில் பயிற்சி வழங்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு உரித்தானவை எனவும், உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பிலான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக அவ்

உபகரணங்கள் சுயதொழிலிற் பயிற்சி வழங்கப்பட்டவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டமை குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iv). இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுயதொழிலிற்காக வழங்கப்படுவதற்கு ரூபா 4,476,879 தொகைக் கிரயமான 121 ஜுக்கி தையல் இயந்திரங்களும், ரூபா 726,895 பெறுமதியான 53 மகளிர் துவிச்சக்கர வண்டிகளும் ரூபா 217,800 பெறுமதியான 120 பாடசாலை உபகரணத் தொகுதிகளும் கொள்வனவு செய்யப்பட்டமை சர்ச்சைக்குரியதாகியிருந்தது.

**3.18 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 19 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 126 | 90 | 36 |
| (iv) | ஆரம்ப நிலை | 56 | 54 | 02 |
| | மொத்தம் | **209** | **164** | **45** |

## 4. தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

### 4.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

ஒரு செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடு செய்யப்பட்டிரந்த தேறிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு ரூபா 1,951,163 தொகையான அதாவது 91.69 சதவீதமான ஏற்பாட்டு அளவு சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 வருமானக் கணக்குகள்

பணிப்பாளர் நாயகம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீடு ஒன்றின் வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானச் சேகரிப்பு, கணக்கீடு மற்றும் கணக்குகள் சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் வருமானக் குறியீட்டிற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 இன் பாதீட்டு மதிப்பீட்டின் படி வருமான மதிப்பீடு ரூபா 12,000,000 தொகையான போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் மதிப்பீட்டு வருமானம் ரூபா 7,369,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருமான மதிப்பீடு, சேகரிப்பு, கண்காணிப்பு மற்றும் பதிவுசெய்தல் தொடர்பாக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பொது வைப்புக் கணக்கு

உரிமை கோரும் காலம் முடிவுற்ற சகல வைப்புக்கள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

29001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,067,982 தொகையான கடன் மீதிகள் 01 வருடம் முதல் 18 வருடங்கள் வரையான கால வீச்சிலிருந்து நிலவிவந்த போதிலும், அந் நிலுவைக் கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய

பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி, ஓர் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்று 03 மாதங்கள் கடந்த பின்னர் திணைக்களத்தில் தீர்க்கப்படாதுள்ள கடன் மீதிகள் காண்பிக்கப்படலாகாத போதிலும், ஒரு உத்தியோகத்தரின் ரூபா 150,700 கடன் மீதிகள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 47,069 தொகையான 2 கடன் மீதிகள் 18 வருடங்கள் மற்றும் 11 வருட காலம் முதல் நிலவி வந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அம் மீதிகள் தீர்த்து வைப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஈ) பிணையாளி மரணித்த மற்றும் பிணையாளிகள் அற்ற பணியில் இருந்து விலகிய உத்தியோகத்தர்களுக்கு உரிய 2 வருடங்கள் முதல் 22 வருடங்கள் வரையான கால வீச்சில் இருந்து நிலவிவரும் ரூபா 366,502 தொகையான கடன் மீதிகளை அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் முடியாதிருந்தது.

(உ) பணி நீக்கம் செய்யப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடம் இருந்த அறவிடப்பட வேண்டிய ரூபா 654,410 கூட்டுத்தொகையான கடன் மீதிகளில் எவ்வித கடன் மீதியும் மீள அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. இவ் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்விற் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்தால் 03 மோட்டார் வண்டிகள் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு முறையற்ற விதத்தில் 03 வருடங்களுக்கு மேலான காலமாக விடுவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வேறு நிறுவகங்களின் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்திடம் இருந்த மோட்டார் வாகனம் ஒன்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிடம் இருந்த 02 மோட்டார் வாகனங்களும் முறையான அங்கீகாரம் இன்றி திணைக்களத்தால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(இ) வாகனப் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிராமை

ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 76,585,343 கூட்டுத்தொகையான வாகனம் தொடர்பாக குறித்த பெறுமதி உள்ளடக்கப்பட்ட ஓர் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 தீர்க்கப்படாத பொறுப்புகள்**

திணைக்களத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 574,534,643 தொகையானதுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 214 இன் பிராகாரம் ஓர் பொறுப்புப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 94(1) இன் பிராகாரம் ஏதேனும் ஓர் செலவின விடயத்தின் செலவினங்களும் பொறுப்புகளினதும் அளவு நிதியாண்டின் ஏற்பாட்டை மிகைக்கலாகாத போதிலும் 2 செலவின விடயங்களுக்கு மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகளை மிகைத்து ரூபா 1,318,503 தொகையான பொறுப்புகள் ஏற்கப்பட்டிருந்தன.

**4.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கியிராமை**

மீனவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 49,994,320 தொகையான உயிர்ப் பாதுகாப்புக் கவசங்கள் வழங்குனரால் நேரடியாக மாவட்ட மீன்பிடி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 8.12.1 ஆம் 8.12.3 ஆம் வழிகாட்டலின் படி குறித்த மாதிரிகளுக்கு இணங்க அக் கவசங்கள் இருந்தமையை உறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.9 செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதிலான நலிவுகள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) எரிபொருள் உதவி மானியத் திட்டம் ஒன்றாக மீன்பிடி வலைகள் வழங்கும் செயற்திட்டம்

23,000 எரிபொருள் மானிய மீன்பிடிப் படகுகளில் 14,811 படகுகளுக்கு எரிபொருள் மானியத்திற்குப் பதிலாக மாற்று மானிய முறையாக ஒரு படகிற்கு ரூபா 112,500 பெறுமதியான மீன்பிடி வலைகளும் உயிர்க் காப்புக் கவசங்களும் வழங்குவதற்கு விலை மனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீன்பிடி வலைகள் வழங்கப்படுவதற்காக அரசாங்கக் கம்பனி ஒன்றால் விலைக் மனுக்கள் வழங்கப்பட்டிருந்தன. அக் கம்பனியால் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 7.8.4 வழிகாட்டலின் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்திராத காரணத்தால் விலைமனுக்கள் மதிப்பிடுகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அக் கம்பனியை மதிப்பிடுவதிலிருந்து அகற்றியிருக்கவில்லை.

(ii) மீன்பிடி வலைகள் கொள்வனவு செய்யப்படுகையில் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 50 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட 6 கொள்வனவுகள் தொடர்பாக அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் 2.14.1 ஆம் வழிகாட்டலிற்கு மாறாக அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்குப் பதிலாக திணைக்களத்தின் கொள்வனவுக் குழு ஒன்றால் குறித்த கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) மொத்தக் கிரயம் ரூபா 1¸190.36 மில்லியன் தொகையான மீன்பிடி வலைகள் கொள்வனவுச் செயற்திட்டத்திற்காக ரூபா 1,156.12 மில்லியன் பெறுமதியான மீன்பிடி வலைகள் அரசாங்கக் கம்பனி ஒன்றால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 5:4:10 ஆம் வழிகாட்டலின் படி செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்வதற்கும் இதற்குரிய ரூபா 223.91 மில்லியன் தொகையான முற்பணம் கொடுப்பனவு செய்யப்படுகையில் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4(1) வழிகாட்டலின் படி, முற்பணப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) மீன்பிடி வலைகள் வழங்கப்படும் செயற்திட்டத்திற்கு உரித்தான சகல மீன்பிடி வலைகளும் 2014 நவம்பர் 19 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் உரிய அரசாங்கக் கம்பனியால் இணைப்பு 27 இற்கு உரித்தான ரூபா 554¸248¸095 கூட்டுத்தொகைப் பெறுமதியான மீன்பிடி வலைகள் வழங்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர் வழங்கியிருந்த வலைகள் 42 நாட்கள் முதல் 116 நாட்கள் வரையான காலப்பகுதி அளவில் தாமதமாகியிருந்தது.

(v) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9 ஆம் வழிகாட்டலின் படி, ஒப்பந்தம் வழங்கப்படுகையில் ஒப்பந்த உடன்படிக்கைக்கு உட்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களம் ஒப்பந்தக்காரர்களுடன் முறையற்ற விதத்தில் புரிந்துணர் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. அவ் உடன்படிக்கையின் படி, ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட ஒப்பந்தக்காரர் தவறும் பட்சத்தில் எஞ்சிய பகுதிகள் கூடிய விரைவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு உடன்பட்டிருந்தமையால் வழங்கல் தாமதமடைந்தமை அல்லது வழங்கப்படத் தவறியமையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக திணைக்களம் சட்ட ரீதியான மேவுகையைப் பெற்றிருக்கவில்லை.

(vi) குறித்த அரச கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 223.91 மில்லியன் தொகையான முற்பணத்தில், வழங்கப்பட்ட பணி முற்றாக மேற்கொள்ளப்படாது ரூபா 42,682,320 தொகையான முற்பணம் 90

நாட்கள் முதல் 132 நாட்கள் வரையான கால வீச்சில் வைத்துக்கொள்ளப்பட்டு தவறாக வேறு கட்டளைகளுக்கு உரிய உறுதிச்சீட்டுக்களால் தீர்க்கப்பட்டிருந்தன. இங்கு கொடுப்பனவுகள் அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்துகையில் நிதிப் பிரமாணம் 137 மற்றும் 138 தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) மீன்பிடி வலைகள் வழங்குவதற்காக தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 37,939,520 தொகையான 09 ஒப்பந்தங்களில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 02 மாவட்டங்களிற்கு உரித்தான ரூபா 9,970,400 பெறுமதியான வலைகள் விநியோகிக்க அக் கம்பனி முற்றாகத் தவறியிருந்ததுடன் எஞ்சிய 07 மாவட்டங்களுக்கு உரித்தான ரூபா 27,969,120 பெறுமதியான வலை வகைகளின் விநியோகம் தாமதமாகியிருந்த போதிலும் திணைக்களம் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையையும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொண்டிருக்கவில்லை.

(viii) 08 மாவட்ட அலுவலகங்களிற்கு விநியோகிக்கப்பட வேண்டிய 8,216 வலைத் தொகுதிகளில் 6,184 வலைத் தொகுதிகள் மாத்திரம் வழங்குனர்களால் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2015 மார்ச் மாதம் வரையில் 2,702 வலைத் தொகுதிகள் நலனாளிகளுக்கு வழங்கப்படாது மாவட்ட அலுவலகங்களில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ix) கொள்வனவு ஆரம்பிக்கப்பட முன்னர் ஒவ்வொரு மாவட்டங்களிலும் வலைகளின் தேவைப்பாடு இனங்காணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(x) வலைகள் கட்டளையிடப்படுகையில் அக் கட்டளைகளின் பிரதிகள் மாவட்ட அலுவலகங்களிற்குக் கிடைக்கப்பெறாமை மற்றும் வழங்கப்பட்ட வலைகள் கோரல்களுக்கு இணங்கும் வகையிலானவையா என்பது குறித்து பரீட்சித்து கையேற்கப்படாததன் காரணமாக கட்டளையிடலிற்கும் வழங்கல்களிற்கும் இடையே முரண்கள் காணப்பட்டன.

(xi) மீனவர்களின் தேவைப்பாட்டிற்கு இணங்காத வகையில் வலைகள் வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அவர்கள் வலைகளைப் பெறுவதற்கு மறுத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் கட்டளைகளுக்கு இணங்க வழங்கப்பட்டிராத வலைகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாகாத போதிலும் இதற்காகவும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஆ) திவிநெகும மீன்பிடி பின்அறுவடை தொழிநுட்ப செயற்திட்டக் கடன் தீர்மானத்திட்டம்**

---

15 மாவட்டங்களின் தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்ற 2,675 நலனாளிக்கு ரூபா 10,000 படி கடன் தொகையை வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டின் போது இச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி

அமைச்சால் ரூபா 26.75 மில்லியன் தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. ஒரு வருடம் கடந்த பின்னர் கடன் வழங்கப்படும் முன்னேற்றம் குறைந்த நிலையில் நிலவிய காரணத்தால் அவ் அமைச்சிற்கு ரூபா 10 மில்லியன் தொகை மீள அனுப்பிவைக்கப்பட நேர்ந்தமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் செயற்திட்டம் சுழற்சி நிதியமாக செயற்பட்டிருந்ததுடன் 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையில் 2,109 நலனாளிகளிற்கு ரூபா 21,090,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இது எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 79 சதவீதமாகும்.

(ii) இக் கடன் தொகையில் 16 சதவீதம் அதாவது ரூபா 3,386,417 கடன் தொகைக் கொடுப்பனவு தவறவிடப்பட்டு அல்லது தாமதமடைந்திருந்ததுடன் கடன் தவணைப் பண அறவீடு தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் பிரதேச மட்ட உத்தியோகத்தர்களின் பங்கேற்பு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iii) இக் கடன் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இலங்கை வங்கியில் 2012 செப்தெம்பர் 17 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா 16.75 மில்லியன் தொகையான வைப்புத் தொடர்பாக கணக்காய்விற்கு நேரடி மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் அலுவலக நிர்மாணிப்பு

---

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் அலுவலக நிர்மாணிப்பிற்காக பெறுமதி சேர் வரி தவிர்ந்த ரூபா 22,172,055 தொகையான செலவின மதிப்பீட்டிற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளரால் விலை மனுக் கோரப்பட்டு ரூபா 14,346,910 ஆன ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவகத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேர்ந்தெடுக்கப்பட்ட விலை, திணைக்களத்தின் மதிப்பீட்டைப் பார்க்கிலும் 35 சதவீதத்தால் அதாவது ரூபா 7,825,145 ஆல் குறைவடைந்த காரணத்தால் செயற்பாட்டின் தரம் குறித்து ஏற்படக்கூடிய சிக்கல் தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரரால் மேற்குறித்த கட்டிடம் நிர்மாணிக்கப்படுவதற்கு உடன்பட்ட தொகை பெறுமதி சேர் வரியுடனான ரூபா 16,068,539 தொகையான போதிலும் இதற்காக ரூபா 20,000,000 தொகை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(iii) 2014 ஒக்டோபர் 29 ஆம் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த இக் கட்டிடம் கணக்காய்வுத் தினமாகிய 2015 மே வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.10 செயலாற்றல்**

2014 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் படி திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத முக்கிய செயற்பாடுகள்

திணைக்களம் முக்கிய செயற்பாடுகளை போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(i) செயற்பாட்டுத் திட்டத்தின் படி, புதிய கடற்றொழில் ஓய்வூதியத் திட்டத்திற்கு 750 மீனவர்களைச் சேர்த்துக் கொள்ள இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது இதற்காக எந்த மீனவரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 7,250 நன்னீர் மீன்பிடிப் படகுகள் பதிவு செய்து கொள்ளப் படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது எவ்வித படகும் பதிவு செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) திணைக்களத்தின் பௌதீகச் செயலாற்றல் அறிக்கையின் படி, செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 09 நிகழ்ச்சித்திட்டங்களினால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்தும் பௌதீகச் செயலாற்றல் 1 சதவீதத்தில் இருந்து 70 சதவீதம் வரையான வீச்சில் நிலவியது.

**4.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் சில பின்வருமாறாகும்.

(அ) கடல் அட்டை மற்றும் சங்கு ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீர் வளங்கள் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடலட்டைகளையும் சங்குகளையும் பிடித்தல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்துச் செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் கடற்றொழில் நீர் வளங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2011 ஒக்டோபர் மாதம் முதல் நீர் அட்டைகளையும் சங்குகளையும் பிடிப்பதில் இருந்து ஏற்றுமதி செய்வது வரையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் தனியார் நிறுவகங்களுடன் உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தது. எவ்வித சட்டரீதியான உரிமையும் இன்றி இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த மேற்குறித்த செயற்பாடு தொடர்பில் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் எவ்வித சட்ட நடவடிக்கையும் 2014 நவம்பர் 10 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 01 கிலோ கிராமிற்கு ரூபா 10 படி கடலட்டைகளை ஏற்றுமதி செய்வதற்கு மீன் ஏற்றுமதியாளர்களுக்கு அனுமதி கடற்றொழில் நீர் வளங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தாலும் அவ் ஏற்றுமதிக் கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. உடன்படிக்கை இடப்பட்ட காலமான 03 மாதங்களுக்காக ஒரு கம்பனியில் இருந்து ரூபா 500,000 படி அறவிடப்பட்டிருந்தது. இவ் அமைச்சரவைத் தீர்மானத்தின் படியெனக் குறிப்பிட்டு ஏற்றுமதி செய்யப்படும் கடலட்டைகளையும் சங்குகளையும் 01 கிலோ கிராமிற்கு ரூபா 100 படி அறவிடப்படுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது. மிகவும் சலுகை விலை அடிப்படையில் மீன் வள முகாமைத்துவத்திற்கு அமைச்சால் சட்டங்கள், விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கையில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் இவ்வாறு உடன்படிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு 2011 ஒக்டோபர் மாதம் முதல் 2014 திசெம்பர் மாதம் வரை கூட்டுத்தாபனம் அறவிட்ட வருமானம் ரூபா 31,428,956 தொகையாகவும் இறக்குமதியாளர்களுக்கு மீளச் செலுத்த வேண்டிய வைப்பு ரூபா 14,000,000 தொகையாகக் காணப்பட்டது.

(iii) 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் மேற்குறித்த விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2014 நவம்பர் வரையில் திணைக்களத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராத காரணத்தால் மேலும் 15 மாதங்களுக்கு மேலான காலமாக சட்டவிரோதமான மற்றும் முறையற்ற விதத்தில் மீன் ஏற்றுமதி செய்பவர்களிடம் இருந்து பணம் அறவிடப்படுவதற்கு இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 4.12 விளைவற்ற செலவினங்கள்

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீன்பிடிப் படகுகளிற்கான தரவுப் பதிவேடுகளின் அச்சீடு

-----------------------------------------------------------------------------------------

வருடாந்தம் இந்து சமுத்திரத்திலிருந்து பிடிக்கப்படும் மீன் தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் இந்து சமுத்திர ஆணைக்குழுவின் தேவைப்பாட்டிற்காக 2015 ஆம் ஆண்டின் தரவுகளைப் பதிவு செய்வதற்காக கடற்தொழில் 5,000 தரவுப் பதிவேடுகள் அச்சிடப்படுவதற்காக இரு நிறுவனங்களிடம் இருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைக் கூறல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 2,796,423 இற்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இங்கு அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3 ஆம் வழிகாட்டலின் படி செயலாற்றல் பிணை ஒன்று பெற்றுக்கொள்வதற்கும் ஒப்பந்தக்காரருடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒப்பந்தம் வழங்கப்படுகையில் 5,000 மீன்பிடித் தரவுப் பதிவேடுகள் அச்சிடப்பட்டு 2014 நவம்பர் 02 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்பட

வேண்டிய வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 100 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2015 ஏப்ரல் 02 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது மீன் உற்பத்தி தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதை நோக்காகக் கொண்டு இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட முன்னர் பதிவேடுகள் விநியோகிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் இச் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை எய்த முடியாதிருந்தது.

## 4.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 26 | 22 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 22 | 12 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 881 | 474 | 407 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 82 | 25 | - |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/(ஒப்பந்த அடிப்படை) | - | 3 | - | 3 |
| | மொத்தம் | 1,058 | 597 | 464 | 3 |